**தலைப்பு 291 – கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்கள்த்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 இன் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள எண்ணிக்கைகள் திறைசேரியின் இறுதி நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைகளுடன் இணங்க வேண்டும். எனினும், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணப் பெறுவனவு மற்றும் வாடகை மற்றும் வேலை | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அரச கணக்குகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட மாதிரிகளுக்கமைய 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதுடன், அந்தந்த மாதிரிகளில் பெறுமதிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய மாதிரிகளின் விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய வாடகை பணி முற்பணக் கணக்கின் 2018.12.31 |

| | | | |
|---|---|---|---|
| | முற்பணப் பெறுவனவுகளின் கூட்டுத்தொகையாக ரூபா 19,876,260 குறிப்பிடப்பட்டிருந்தது. திறைசேரி இறுதிக் கணக்கு பொழிப்பிற்கமைய அந்த பெறுமதி ரூபா 14,028,679 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா ரூபா 5,847,581 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | ஆந் திகதியில் உள்ளபடியான மீதியான ரூபா 8,644,740.00 தொகையான சொத்துக்களின் மீதியானது நிதி நிலமைக கூற்றில் நிதிச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே அரச கணக்குகள் திணைக்கள்ம் வழங்கிய மாதிரிகளின் அறிவுரைகளுக்கமைய அந்த பெறுமதி (ஏ.சீ.ஏ.S.(ஏ)) நிதிச் செயலாற்றல் கூற்றிலும் வருமானமல்லாத பெறுவனவுகள் மற்றும் வருமானமல்லாத கொடுப்பனவுகளாக குறிப்பிடப்பட்டுள்ளதாக தொடர்ந்தும் தெரிவிக்கின்றேன்.<br><br>நடப்பாண்டின் நிதியோற்பாடுகளின் அடிப்படையில் 2104 செலவினத் தலைப்பில் பணி ஆரம்பிக்கப்பட்ட நீர்கொழும்பு புதிய அலுவலகத்தின் நிர்மாணங்கள் உரிய முறையில் கொடுப்பனவை மேற்கொள்ள முடியாமையை முடிவுறுத்த முடியாதிருந்தது. எனினும், அதற்கான வேலை கூலி முற்பண தொகை அந்த ஆண்டிலேயே அறவிடப்பட்ட தொகையாகும். |
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய முற்பணக் கொடுப்பனவாக ரூபா 26,118,292 காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது ரூபா 24,201,132 ஆக ரூபா 2,797,160 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரயாணச் செலவினம் ரூபா 11,741,093 மற்றும் மேலதிக நேர செலவினங்கள் ரூபா 6,163,486 படியாக ரூபா 17,904,579 கூட்டுத்தொகையான மீண்டெழும் செலவினம், மூலதனச் செலவினமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | செலவினங்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியமை | நாடு முழுவதும் கடற்கரைகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பணிகளுக்காக திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர் ஈடுபடும் போது வருடாந்தம் கருத்திற்கொள்ளக்கூடிய தொகையொன்று (ரூபா 20 - 25 மில்லியன்) மேலதிக நேர மற்றும் பிரயாணம் செலவினமாக மேற்கொள்ள நேர்கின்ற போதிலும், உந்த கிரயத்தை உள்ளடக்குவதற்கு மேலதிக நேர மற்றும் உள்நாட்டு பிரயாணச் செலவின விடயங்களின் நிதியேற்பாடு எவ்வாறும் போதுமானதல்ல.<br><br>வேலைத்தளங்களின் அளவு மற்றும் அபிவிருத்தி பணிகளின் தன்மை ஆகியவற்றை கருத்திற் கொள்ளும் போது அதற்காக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிலிருந்து விலகி மேலதிக நேரத்தில் ஈடுபடுத்தலை தடுக்க முடியாதெனவும், அதற்கான செலவினங்கள் ஏற்படுவது மூலதனத் தன்மையிலான அபிவிருத்தி பணிகளின் காரணமாக உள்ளமையும் எனும் நியாயமான காரணங்களின் அடிப்படையில் இந்த மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவினம் இலக்கம் 2509 ஆகிய மூலதன செலவின விடயங்களினூடாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மொத்த வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | |
| (ஆ) | முற்பணப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறியக் காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | |
| (இ) | மீளாய்வாண்டின் போது திணைக்களமானது நிதி நடவடிக்கைகளில் ஈடுபட்டிராத போதிலும், அதன் கீழான வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களிலான வேறுபாடாக ரூபா 41,122,025 குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | |

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

--------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களம் கைச்சாத்திடப்பட்டிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 60,306,419 ஆக இருந்தது. எனினும், நிதிக்கூற்றுக்களில் அந்த பொறுப்புக்களின் அளவானது ரூபா 8,027,750 இனால் | ஆண்டின் இறுதியளவில் கைச்சாத்திடப்பட்டிருந்த பொறுப்புகளின் அளவானது சரியாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டியமை. | 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான பொறுப்புக்களின் (கிடைக்கப்பெற்ற பட்டியல்கள்) கூட்டுத்தொகை ரூபா 52,278,669 ஆக இருந்ததுடன், 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டினுள் |

| | | |
|---|---|---|
| குறைத்து ரூபா 52,278,669 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | | மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு அந்த பொறுப்புக்களுக்கு மேலதிகமாக 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக எஞ்சியிருந்த கடப்பாடுகளின் மீதியானது ரூப 65,771,281.79 இல் ரூபா 8,027,750 தொகையான அளவொன்றும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அந்த ரூபா 8,027,750 தொகைக்கு பட்டியல்கள் 2018.12.31 ஆந் திகதியில் கிடைத்திக்காமையால் அவை பொறுப்புக்களை அல்லது கடப்பாடுகளை குறிப்பிடப்பட்டுள்ளது. |

### 2.2 வைப்பு மீதிகள்

-----------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>திணைக்களத்தின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| திணைக்களத்தின் வைப்புக் கணக்குகளில் 02 முதல் 05 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 3,719,010 கூட்டுத்தொகையான வைப்பு மீதிகள் நிலவின 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானத்திற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கொடுப்பனவு மேற்கொண்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 3.1 திட்டமிடல்

-------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>திணைக்களத்தின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் | நிறுவனக் கட்டமைப்பு மற்றும் பதவியணி |

| | | |
|---|---|---|
| இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தனால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br>(i) நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு.<br>(ii) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி தொடர்பான தகவல்கள். | இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்பான விபரம் முன்வைக்கப்பட்டுள்ளது. |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | திணைக்களத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது 13 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த ரூபா 1,024.5 மில்லியனாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த 13 செயற்திட்டங்களில் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஒரு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மற்றைய 12 செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 12 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. அந்த 12 செயற்திட்டங்களின் நிதி செயன்முன்னற்றம் 29 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. ஒட்டுமொத்த நிதியேற்பாட்டில் 86 சதவீதம் அல்லது ரூபா 890.29 மில்லியன் நிதியேற்பாடு மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை உச்சமாக பயன்படுத்தி உச்ச பௌதீக செயன்முன்னேற்றத்தினை அடைய வேண்டும். | வெளிவாரி காரணிகளால் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்பட முடியாதிருந்தது. |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | திணைக்களத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் கரையோரப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அத்துமீறிய நிர்மாணங்கள் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை இனங்காணப்பட்ட அத்துமீறிய நிர்மாணங்களின் எண்ணிக்கை 1764 ஆக இருந்தது. அந்த அத்துமீறிய நிர்மாணங்களை உடைத்து அகற்றுவதற்காக 1615 கட்டளைகள் பெறப்பட்டிருந்தன. எனினும், உடைத்து அகற்றப்பட்ட அளவானது 215 ஆக இருந்ததுடன், அது உடைந்து அகற்றப்பட வேண்டிய அளவில் 13 சதவீதமான குறைவான செயலாற்றல் அளவாக இருந்தது. | இனங்காணப்பட்ட அத்துமீறிய நிர்மாணங்களின் தன்மைக்கமைய வகைப்படுத்தப்பட வேண்டியவற்றை உடைத்து அகற்றுவதற்கு திட்டமிட்டு அத்துமீறிய நிர்மாணங்களை உடைத்து அகற்ற வேண்டும். | இந்த இடத்திற்காக மாற்று இடங்களை வழங்க முடியாமை மற்றும் சமூக மற்றும் அரசியல் தலையீடுகள் காரணமாக இவ்வாறு உடைத்து அகற்றுல் தாமதமடைந்தமைக்கு காரணமாக இருந்தது. |

3.4 பெறுகைகள்

-----------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | திணைக்களத்தின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) நுரைச்சோலை - இலன்தடிய கிரயின தரத்தினை நிர்மாணிக்கும் ஆரம்ப கிரய மதிப்பீட்டிற்கமைய செலவினமானது ரூபா 35.5 மில்லியனாக இருந்தது. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.2 வழிகாட்டிக்கமைய அதன் ஆரம்ப கிரயமதிப்பீடு திணைக்க ளத்தின் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில் லை | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | நுரைச்சோலை - இலன்தடிய கிரயின நிர்மாண வேலைத்தளத்திற்குரிய ஆரம்ப கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், தவறுதலாக குறித்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், தவறுதலாக குறித்த மதிப்பீடு நிறுவனத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டிராததுடன், திருத்தப்பட்ட கிரய மதிப்பீடொன்று பின்னர் தயாரிக்கப்பட்டு, அது நிறுவனத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.6(ஆ) வழிகாட்டிக்கமைய ஒப்பந்ததாரர்களின் கொடுப்பனவுகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகையின் ஒப்பந்தம் செலுத்தி மிகுதியை குறைபாட்டு வகைகூறல் காலம் நிறைவடையும் வரை நிறுத்தி வைக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட மொத்தத் தொகையும் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்ட பின்னர் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட மொத்தத் தொகையும் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்ட பின்னர் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழங்குநரின் வழங்கல்கள் உரிய முறையில் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், உரிய வழங்கல் தொடர்பிலான பொறுப்பிலிருந்து வழங்குநர் விடுவிக்கப்படுவார். அதனால் வழங்கல்கள் முழுமையாக நிறைவடைந்த பின்னர் உரிய பிடிகாசு வழங்குநருக்கு செலுத்தப்பட்டுள்ளது. |
| (இ) திணைக்களத்தினால் ரூபா 5,116,500 தொகையான | -மேற்படி- | கடலோரப் பாதுகாப்பு நிர்மாணங்களின் போது |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8(அ) மற்றும் 5.4.9 வழிகாட்டிக்கமைய செயலாற்றல் பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | இயந்திர உபகரணங்கள் மற்றும் பார ஊர்த்திகள் வாடகை அடிப்படையில் வழங்குநர்களிட மிருந்து பெற்றுக்கொள்ளப்ப டுவதுடன், திணைக்களம் அவ்வாறான வழங்குநர்களிட மிருந்து செயலாற்றல் பிணையொன்றினை பெற்றுக்கொ ள்வதில்லை. எனினும், இந்த ஆண்டு முதல் இயந்திரம் மற்றும் பார ஊர்திகள் வழங்கல்களின் போது இந்த பணியை பூர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஈ) | திணைக்களத்தினால் பாரஊர்திகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் விநியோகிப்பதற்காக ரூபா 8.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 இன் பிரகாரம் வழங்குநருடன் ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | பெறுகைககள் வழிகாட்டிக்க மைய பொருட்களை விநியோகிப்பதற்காக உடன்படிக் கைகளுக்கு உள்ளாவதுடன், இயந்திர உபகரணங்களை விநியோகிப்பதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடும் போது ஏற்பாடு நடைமுறை பிரச்சினைகள் காரணமாக மேற்கொள்ளப்படாததுடன், இந்த வருடம் முதல் உடன்படிக்கைகளும் தயாரிக்கப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த அழிக்கப்பட வேண்டிய பொருட்கள் 70, பழுதுபார்க்கப்பட வேீடிய பொருட்கள் 06 மற்றும் விற்பனைக்காக பரிந்துரைக்கப்பட்ட பொருள் உருப்படிகள் 258 தொடர்பில் | 2017 மே 31 ஆந் திகதிய 2017/04 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

2017 மே 31 ஆந் திகதிய 2017/04 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கு சேவையை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது கடலோரங்களில் மேற்கொள்ளப் பட்ட நிர்மாணங்களுக்காக அனுமதிகோரும் 2384 கோவைகள் திணைக்களத்திற்கு கிடைத்திருந்ததுடன், அந்த கோவைகளில் 1,884 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய 500 கோவைகளுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டியமை. | அனுமதிப்பத்திரங்களை வழங்கும் தேவைப்பாடு / அடிப்படைகளை பூர்த்தி செய்ய முடியாத விண்ணப்ப ங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் நிராகரிக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களாக சில விண்ணப்பங்கள் அனுமதிப்பத்திரங்கைள வழங்கும் தேவைப்பாடு நிறைவு செய்யாமை மற்றும் விண்ணப்பத்தினை பாரிசோதிக்கும் போது அந்த நிர்மாணங்கள் கடலோர வலயத்திற்கு புறம்பாக அமைந்துள்ளமையை காணக்கூடியதாக இருந்தது. அதற்கமைய பதிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பங்களுக்காகவும் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படுவதில்லை என்பதை குறிப்பிட முடியும். |